## ஒரு ரோம இராணுவத் தளபதிக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் இயேசுவைப் பற்றி அறிய ஒரு குழு உதவியது

சிறுவர்களுக்கான பின்வரும் நடிவடிக்கைகளில் விருப்பமானதை தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! உமக்காகவும் பிறருக்காகவும் சேவை செய்யும் போது ஒற்றுமையாகப் பணியாற்றவும், அன்போடு ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யவும் எங்கள் குழந்தைகளுக்கு உதவுவீராக."

ரோமப் போர்வீரர்களுக்குத் தலைமை வகித்த அதிகாரியான கொர்நேலியுவைப் பற்றி ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஓர் ஆசிரியரோ கூறட்டும் அல்லது வாசிக்கட்டும் (அப். 10). பேதுருவும் யோப்பாவில் இருந்த அவரது உடன் ஊழியர்களும் ஒன்றிணைந்து இன்னொரு பட்டிணத்தில் முதல் புறஜாதியார் சபையை எவ்வாறு ஆரம்பித்தனர் என்பதை இக்கதை கூறுகிறது. **கதையைக் கூறியபின் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்கவும்.** *(பதில் கேள்விக்குப் பின்).*

- கொர்நேலியு எப்படிப்பட்ட மனிதன்? *(2)*
- இயேசுவைப் பற்றி கொர்நேலியுவுக்கு கூறப்போன குழுவில் பேதுருவுடன் சென்ற குழு உறுப்பினர்கள் யார்? *(23)*
- புறஜாதியாரைக் (யூதர் அல்லாதவர்) குறித்த பேதுருவின் பார்வை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு கனவில் தேவன் என்ன போதித்தார்? *(28)*
- சுவிசேஷத்தைக் கேட்கக் கொர்நேலியுவுடன் காத்திருந்தது யார்? *(24)*
- கொர்நேலியு மற்றும் அவனது குழுவினர் மேல் எவ்வளவு சீக்கிரமாய்ப் பரிசுத்த ஆவி வந்தது? *(44)*
- எவ்வளவு சீக்கிரமாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது? *(48).*

அப். 10 ஆம் அதிகாரத்திலிருந்து பேதுருவும் கொர்நேலியுவும் பற்றிய கதையை **நாடகம்** ஆக்குக:



- சபைத்தலைவருடன் பேசி, பிள்ளைகள் நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- எல்லா பகுதிகளையும் நடிக்க வேண்டிய அவசியமில்லை.
- உங்கள் நேரத்தைக் குழந்தைகளுடன் செலவிட்டு நாடகத்தைத் தயாரிக்கவும்.
- **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவி செய்யட்டும்.
- பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ ஏற்க வேண்டிய பாத்திரங்களாவன: **கதை கூறுபவர், கொர்நேலியு, பேதுரு, தேவகுரல்** (ஒரு மடக்கிய போர்வையை வைத்திருக்கவும்).
- **சிறியவர்கள்** நடிக்க வேண்டியவை: பேதுருவின் கனவில் வரும் **மிருகங்கள், விசுவாசிகள்,** இரண்டு **போர்ச்சேவகர்கள்,** (ஈட்டியைக் குறிக்க நீண்ட கம்பை வைத்துக் கொள்ளலாம்).
- நாடகத்தைப் பார்ப்பவர்கள் கொர்நேலியுவின் நண்பர்களாக இருக்கட்டும்.

**கதை கூறுபவர்:** அப். 10:1-8 லிருந்து கதையின் முதற் பகுதியைக் கூறட்டும். பின்னர் கூற வேண்டியது, "கொர்நேலியு அமைதியாக ஜெபித்துக் கொண்டிருக்கிறான். தேவன் அவனிடம் கூறுவதைக் கேளுங்கள்!"

**தேவ குரல்:** "கொர்நேலியுவே! நான் உன் ஜெபங்களைக் கேட்டேன். எனக்கு நீ சேவை செய்யும் வகைகளையும் கண்டேன். போய் என் ஊழியக்காரனாகிய பேதுருவைப் பார்."

**கதை கூறுபவர்:** அப். 10:9-23 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, "பேதுரு அமைதியாக ஜெபித்துக் கொண்டு இருக்கிறான். தேவன் அவனிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**தேவ குரல்:** எல்லோரும் பார்க்கும்படியாக போர்வையைப் பிடித்துக்காட்டி, பின் அதைத் தரையில் விரிக்கவும். அடுத்து கூறுவது, "பேதுரு, நீ பசியாய் இருப்பதை நான் அறிவேன். இந்த மிருகங்களை அடித்துப் புசி!"

**மிருகங்கள்:** கையும், முழங்காலும் ஊன்றி போர்வையில் சுற்றி நடக்கவும். பன்றி, பாம்பு போல சத்தம் எழுப்பவும்.

**பேதுரு :** "என்னால் முடியாது கர்த்தாவே. பாம்பும் பன்றியும் சாப்பிடுவதா. அது நமது யூத பழக்க வழக்கங்களை உடைப்பது ஆகும்!"

**தேவ குரல்:** "நான் சுத்தமாக்கிய எதையும் அசுத்தம் என்று அழைக்காதே. அடித்துப் புசி."

**பேதுருவும் தேவ குரலும்:** பேதுரு இரண்டு முறை தன்னால் அசுத்தமானதை உண்ண முடியாது என்று கூறுகிறான். ஆனால், ஒவ்வொரு முறையும் தேவ குரல் பதில் அளிக்கிறது, "அந்த மிருகங்களை நான் சுத்தமாக்கிவிட்டேன். கொன்று சாப்பிடு!"

**போர்ச்சேவகர்கள்:** பேதுருவிடம் சென்று கூறுகின்றனர், "செசரியா பட்டிணத்தில் உள்ள கொர்நேலியுவின் வீட்டிற்கு வாரும்!"

**பேதுரு :** "புறஜாதியான கொர்நேலியு போன்ற ஒருவரின் வீட்டுக்குப் போவதை என் பாரம்பரியம் தடுத்தாலும் தேவன் என்னை உங்களோடு போகச் சொல்லி இருக்கிறார். உள்ளே வந்து இன்று இரவை இங்கே கழியுங்கள்."

**விசுவாசிகள்:** "பேதுருவே. நாங்களும் இயேசுவை விசுவாசிப்பதால் உம்முடன் செசரியாவுக்கு வந்து உதவி செய்வோம்."

**கதை கூறுபவர்:** அப். 10:24-48 லிருந்து கதையின் மூன்றாம் பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, "இந்த நாடகத்தை இப்போது பார்த்துக்கொண்டு இருக்கும் நீங்கள் யாவரும் கொர்நேலியுவின் உறவினர்களையும் நண்பர்களையும் குறிக்கிறீர்கள். பேதுரு என்ன கூறுகிறார் என்பதைக் கேளுங்கள்."

**பேதுரு :** "கொர்நேலியுவே! இயேசுவைப் பற்றிக் கூற நீர் எங்களை அழைத்து அனுப்பினீர். ஒரு சொப்பனத்தின் மூலம் தேவன் உம்மையும் உமது கலாச்சாரங்களையும் ஏற்றுக் கொள்வதாக எனக்கு உணர்த்தினார். இயேசு உம்மை இரட்சிக்க மரித்தோரில் இருந்து எழுந்தருளினார்."

**கொர்நேலியு:** "நாங்கள் பாவிகள் என்பதையும் இயேசு எங்களுக்குத் தேவை என்பதையும் பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு உணர்த்தினார்."

**பேதுரு :** கொர்நேலியுவின் நண்பர்களைச் சுட்டிக் காட்டி (நாடகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கும் அனைவரும்) கூறுகிறார், "சகோதரர்களே, பாருங்கள். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். இப்போது நாம் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்போம்."

**கதை கூறுபவர் :** அல்லது ஒரு பெரிய பிள்ளை: உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறவும்.

**குழந்தைகள்** இந்தக் கதையைப் பெரியவர்களுக்கு **நடித்துக்காட்டினால்,** மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

ஒரு பன்றியின் படத்தை **வரைக:**

**பிள்ளைகள்** இதைப் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, எதைச் சாப்பிட்டாலும் சரி எல்லா கலாச்சார மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை இது சித்தரிக்கிறது என்று விளக்குக.



இயேசுவைப் பற்றி பிற கலாச்சார மற்றும் சாதி மக்களுக்குக் கூறுவதில் சிரமம் ஏற்படுத்தும் பிற விஷயங்களைப் பற்றிய உதாரணங்களை சிறுவர்களிடம் கூறச் சொல்லவும்.

**பெரிய பிள்ளைகள்** ஒரு ரோம வீரனின் (இந்தப் பாடத்தின் முதல் பக்கம் பார்க்க) படத்தை வரையட்டும். இது ஒரு நல்ல மனிதனாகிய கொர்நேலியு எவ்வாறு இயேசுவைப் பற்றி தன் நண்பர்களும் கேட்க உதவினான் என்பதை அவர்களுக்கு நினைவூட்டும்.

**மனன வசனம்:** 2 நாளா. 16:9 (முதல் பகுதி: "தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடு இருப்பவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கச்செய்யும்படி கர்த்தருடைய கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டு இருக்கின்றன."

**சங்கீதம் :** சங், 67:1, 2, 3 & 4 வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

எவ்வாறு நாம் ஒரு குழுவாகப் பணியாற்றி பிற கலாச்சார மக்களுக்கு இயேசுவைப் பற்றி கூறமுடியும் என்பதைக் குறித்து **பெரிய பிள்ளைகள்** கவிதை, பாடல் அல்லது குறு நாடகம் எழுதட்டும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, பாவத்தில் இருந்தும் மரணத்தில் இருந்தும் எல்லா தேசத்து மக்களையும் நீர் இரட்சிப்பதால் உம்மைத் துதிக்கிறோம். எங்களை விட மாறுபட்ட கலாச்சார மக்களாக இருந்தாலும் அவர்களை நேசிக்கவும் இயேசுவைப் பற்றி கூறவும் எங்களுக்கு உதவி செய்வீராக!"

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net